**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

D.W.–1

O.S.No. 570/2022

2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 17 ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி திரு.கே.ஆர். கண்ணன், பி.ஏ., பி.எல்., கூடுதல் சார்பு நீதிபதி, திருப்பூர் அவர்களால் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : திரு. முனியாண்டி | வயது:52 |
| த/பெ. : திரு. பெரியசாமி | முகவரி: |
| தொழில் : | |

**முதல் விசாரணை :**

வாதி ஆஜர் இல்லை. 2 ம் பிரதிவாதி ஆஜர். 1 மற்றும் 3 பிரதிவாதிகள் தோன்றா தரப்பினராக உள்ளார்கள். வாதி பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். தாவாவில் நான் 2 ம் பிரதிவாதி. முதல் விசாரணைக்கான எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் உண்மையானவை. பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு வழக்குரைஞர் முன்னிலையில் கையொப்பம் செய்தேன். அதை ஏற்றுக் கொண்டு நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை என் தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | |
|---|---|---|
| 16.06.2025 – வாதி மற்றும் பிரதிவாதி இடையே ஏற்பட்ட பதிவு ஏற்படாத உடன்படிக்கை பத்திரம் (கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞர் ஆவணத்தில் உள்ள கையொப்பம் வாதியுடையது ஆனால் சொன்ன தேதியில் 2 ம் பிரதிவாதி தொகையை திருப்பி செலுத்தப்படவில்லை. ஆவணம் பதிவு ஏற்படவில்லை என்று ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.) | அசல் | **பி.வா.சா.ஆ 1** |
| 2 ம் பிரதிவாதியின் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பிட்டு சரி பார்க்கப்பட்டது | ஒளி நகல் | **பி.வா.சா.ஆ 2** |

ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆகவே எனது தரப்பு சான்று ஆவணங்களை ஏற்று வழக்குப்படி உத்தரவு ஆக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை**

வாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

| |
|---|
| சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.<br><br>ஒம்/-கே.ஆர்.கண்ணன்.<br>கூடுதல் சார்பு நீதிபதி,<br>திருப்பூர். |